இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பராயம்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக

வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

	உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பந்தி 49 இன் பிரகாரம், சொத்து, பொறிகள் மற்றும் உபகரணங்கள் உருப்படிகளின் மீள் மதிப்பிட்டின் போது, அதனுடன் தொடர்புடைய முழுச் சொத்து வகையும் மீள் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். ஆயினும், கிரயம் ரூபா 7,206,736 ஆக இருந்த நுவரெலியா சுற்றுலா விடுதியில் அமைந்துள்ள கட்டிடத்தைத் தவிர, ஏனைய கட்டிடங்கள் மட்டும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.	2016 ஆம் ஆண்டில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டபோது, காணியின் உரிமை தொடர்பில் இருந்த ஒரு பிரச்சினை காரணமாக அது கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை. தற்போது அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளதால், புதிய மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைத்தவுடன் காணியின் பெறுமதியைக் கணக்குகளில் உள்ளடக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எவ்வாறாயினும், காணி மற்றும்	கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், முழுச் சொத்து வகையும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

		கட்டிடங்கள் தவிர்ந்த ஏனைய சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு, இறுதி நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்பட்டுள்ளன.	
(ஆ)	மீளாய்வாண்டில், திறைசேரியிலிருந்து மூலதன மானியமாகப் பெறப்பட்ட ரூபா 25,203,016 தொகையும், அத்துடன் கடந்த வருடங்களில் பெறப்பட்ட திறைசேரி மானியங்களை தேய்மானம் உட்படுத்திய பின்னர் எஞ்சியிருந்த ரூபா 491,907,397 தொகையும், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் பரிமாற்றமற்ற கொடுக்கல் வாங்கல்களினால் பெறப்பட்ட வருமானம் எனக் கணக்குகளில் பதியப்பட வேண்டியிருந்தபோதிலும், அவை மூலதன மானியங்களின் கீழ் கணக்குகளில் பதியப்பட்டிருந்தன. அந்த மானியங்களுக்குரிய மீளாய்வாண்டின் வீழ்ச்சிப் பெறுமதி ரூபா 19,963,739 ஐ சீராக்கிய பின், 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா 497,146,674 ஆனது பிற்போடப்பட்ட வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டுக்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது, பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் படி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், மானியங்கள் மற்றும் சொத்துக்கள் கணக்குகளில் சரியாகப் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(இ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 19 இன் பந்தி 76 இன் பிரகாரம், ரூபா 34,507,720 ஆக இருந்த பணிக்கொடைக் கொடுப்பனவுக்கான ஒதுக்கீடு தொடர்பிலான சேவையின் பின்னரான நலன்பேறுகளின் கடப்பாடு மற்றும் அதனுடன் தொடர்புடைய நடப்புச் சேவைச் செலவின் நிகழ்காலப் பெறுமதி என்பவற்றை கணக்குகளில் காண்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 19 இன் படி கணக்கிடுவதற்கான அத்தியாவசியமான எதிர்காலத் தரவுகள் (சம்பள உயர்வுகள், கழிவு வீதங்கள், ஊழியர் பணிச்சுழற்சி போன்ற ஊகிக்கப்பட்ட தரவுகள்) அத்தகைய விசேட நிபுணத்துவ அறிவு அல்லது அந்த தரவுகள் எம்மிடம் இல்லை. இது தொடர்பாக, பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் அல்லது பொது திறைசேரியிடம் ஆலோசனை பெற்று, அதன் பிரகாரம் 2025 ஆம் ஆண்டுக்கான கணக்குகளைத் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.	நியமத்தின் பிரகாரம், சேவையின் பின்னரான நலன்பேறுகளுக்கான கணக்குகளைப் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றின் மூலம் 2016 ஆம் ஆண்டில் இலவசக் கொடையாக நிறுவனத்திற்குப் பரிமாற்றம் செய்யப்பட்டிருந்த நுவரெலியா சுற்றுலா விடுதிக்குச் சொந்தமான காணி, மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை.	மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர், உரிய பெறுமதிக்கான கணக்கு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, அவை 2025 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	நிறுவனத்திற்குச் சொந்தமான அனைத்துச் சொத்துக்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்படல் வேண்டும்.
(ஆ)	நிதிக்கூற்றுகளில் ரூபா 12,804,809 ஆக இருந்த இறவிடமுடியாக்கடன் ஒதுக்கீட்டைக் காண்பிக்கும்போது, பெறுகைக்குரியவற்றிலிருந்து கழிக்கப்பட்டு அதன் தேறிய பெறுமதியைக் காண்பிப்பதற்குப் பதிலாக, அது நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, நடைமுறைச் சொத்துக்களும் நடைமுறைப் பொறுப்புகளும் அந்தத் தொகையால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டன.	எதிர்காலத்தில் இந்தத் தொகைகள் தனித்தனியாகச் சீரமைக்கப்பட்டு, கடன் பட்டோரின் தேறிய பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	நடைமுறைச் சொத்துக்களும் நடைமுறைப் பொறுப்புகளும் நிதிக்கூற்றுக்களில் சரியாகக் காண்பிக்கப்படல் வேண்டும்.

1.6. பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்
1.6.1 பெற வேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பட்டப்பின்படிப்பு கற்கைநெறிகளிலிருந்து விலகிய 55 பேரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 11,578,750 கற்கைநெறிக் கட்டணங்கள் 03-05 வருட காலப்பகுதி வரையிலும், அத்துடன் மொழிக் கற்கைநெறிகளிலிருந்து விலகிய 46 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,091,027 கற்கைநெறிக் கட்டணங்கள் 01-05 வருட காலப்பகுதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காது தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தன.	இந்த மதிப்பிடப்பட்ட வருமானங்களை கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த பதிவழிப்புகள் தொடர்பாக முழுமையான ஒதுக்கீடுகள் 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.	அறவிட முடியாத வருமானங்களை தீர்த்துக்கொண்டு கணக்குகளில் சீராக்கப்பட வேண்டும்.

(ஆ)	06 வருடங்களுக்கு மேலான காலப்பகுதியில் இருந்து அறவிடப்படாமல் நிலுவையில் உள்ள, ரூபா 1,752,771 பெறுமதியான பலதரப்பட்ட பெறுகைக்குரிய மீதித் தொகைகள் 11 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	இந்த மீதித் தொகைகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மேலதிகத் தகவல்களைப் பரிசீலனை செய்வதற்கும், பரிந்துரைகளைப் பெறுவதற்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	அறவிட முடியாத மீதித் தொகைகளைத் தீர்த்துக்கொண்டு, கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
பல்வேறு அரச நிறுவனங்களிடமிருந்து பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் பரீட்சைகள் நடத்துவதற்காகப் பெறப்பட்ட, 03-05 வருட காலப்பகுதி வரையில் இருந்து நிலுவையிலுள்ள ரூபா 3,289,670 பெறுமதியான மீதித் தொகைகள் செலுத்த வேண்டிய மீதிகளாக தீர்க்கப்படாமல் காண்பிக்கப்பட்டிருந்தன.	இதில், 5 வருடங்களுக்கு மேலாக நிலுவையிலுள்ள ரூபா 2,549 ஐத் திரும்பச் செலுத்த வேண்டியுள்ளது. ரூபா 3,287,119 ஆனது பெறுகைகள் டிப்ளோமா தொடர்பானதுடன், அது 3 முதல் 5 வருட காலப்பகுதிக்குரியதாகும். அதனுடன் தொடர்புடைய இறுதிக் செலவின அறிக்கை கணக்குகளில் பதிவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், அதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	செலுத்த வேண்டிய மீதித் தொகைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1997 இன் 22 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவக (திருத்தச்) சட்டத்தின் 2(5) (ஏ), (ஐ) பிரிவுகள்	நிறுவனத்தின் ஆளுகைச் சபைக்கு அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை.	ஆளுகைச் சபையின் ஆலோசனையின் பிரகாரம், கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டிய ஆளுகைச் சபை உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு வாய்மூலமாகவும் மற்றும் எழுத்து மூலமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பிரகாரம் ஆளுகைச் சபை நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.
(ஆ)	1971 இன் 38 ஆம் இலக்க	விநியோகத்திற்குப் பின்னர் எஞ்சியுள்ள தேறிய	ரூபா 28,610,370 இனை ஒரு தேறிய மிகையாக காண்பிப்பது,	நிதிச் சட்டத்தின்படி, விநியோகத்திற்குப்

	நிதிச் சட்டத்தின் 10(05) ஆம் பிரிவு	வருமானம் திரண்ட நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டும். ஆயினும், நிறுவனம் அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிறுவனத்தின் ஊழியர்களின் ஊதியங்களைச் செலுத்துவதற்காக பொது திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூபா 150,000,000 தொகையான பண மானியங்களையும் கருத்திற்கொண்டே ஆகும். மானியம் கிடைக்கப் பெறாத பட்சத்தில், எதிர்காலத்தில் நிதிநிலை திருப்தியற்றதாக மாறும் என்பதால், இந்தச் சூழ்நிலை தொடர்பாக எதிர்காலத்தில் ஆளுகைச் சபை மற்றும் திறைசேரியுடன் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.	பின்னர் தேறிய வருமானம் திரண்ட நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.
(இ)	2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 2(1) மற்றும் 102 ஆம் பிரிவுகள்	நிறுவனம் வருமான வரிக்கு பதிவு செய்யவோ அல்லது வரி விலக்குக்கு விண்ணப்பிக்கவோ நடவடிக்கை எடுக்கவில்லை.	வரிப் பொறுப்பு தொடர்பில், நிறுவனத்தின் சட்டம் மற்றும் பல வருடங்களின் இறுதி கணக்கறிக்கைகள் உள்ளிட்ட தகவல் அறிக்கை ஒன்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மத்திய தர கூட்டுத்தாபனப் பிரிவு - 01 இற்கு வழங்கப்பட்டுள்ளது. வரிப் பொறுப்பு தொடர்பான எந்தவொரு அறிவித்தலும் இதுவரை வழங்கப்படவில்லை. எவ்வாறாயினும், மீண்டும் திணைக்களத்திடம் வினவி அதற்கேற்ப எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	வரிக்குப் பதிவு செய்யவோ அல்லது வரி விலக்குக்கு விண்ணப்பிக்கவோ நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை			
(i)	நிதிப் பிரமாணம் 763	பொருட்களைப் பொறுப்பேற்றல், திருப்திகரமாகப் களஞ்சியப்படுத்தல், பொறுப்பைக் கையளித்தல் மற்றும் தகுந்தவாறு அப்புறப்படுத்தல் ஆகியவை தொடர்பான	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் சொத்துப் பதிவுகளைத் தயாரித்தல், வருடாந்தப் பொருட்களின் மெய்மையாய்வின் பின்னர் முறையான அப்புறப்படுத்தல் செயல்முறையை நிறைவேற்றுதல்	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் களஞ்சிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நிறைவேற்றப்படல் வேண்டும்.

		நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருந்தும், நிறுவனத்திற்குச் சொந்தமான 06 களஞ்சியசாலைகளுக்காக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தற்போது களஞ்சியசாலைகள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு உரிய முறையில் நிறைவேற்றப்படுவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.	
(ii)	நிதிப்பிரமாணம் 880	நிறுவனத்தில் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணைச் சட்டத்திற்குஇணங்கப் பிணை வைக்கவில்லை.	எதிர்காலத்தில் சட்டத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்குப் பின்னர், பிணை வைப்பதற்கு அங்கீகரிக்கப்படும் சட்டத்தினால் வழங்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில், எதிர்காலத்தில் களஞ்சியப் பொறுப்பாளர் அல்லது களஞ்சியசாலை தொடர்பான பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைக்கும் நடவடிக்கை நிறைவேற்றப்பட முடியும்.	பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணம் அறவிடப்பட வேண்டும்.
(உ)	இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டியின் 2.6.3(எ) ஆம் பிரிவும் மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8(அ), 6.2.1(அ)(vi) மற்றும் 9.3 வழிகாட்டல்கள்	2024 பெப்ரவரி 22 ஆம் திகதியன்று ரூபா 2,000,000 பெறுமதியான ஒரு நிகழ்ச்சித் திட்ட நிர்வாக கட்டமைப்பை கொள்வனவு செய்வதற்கான ஒரு ஆலோசகரைத் தெரிவு செய்வதில், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களிலிருந்து விலகிச் செயற்படப்பட்டிருந்தது.	எதிர்கால ஆலோசனைக் பெறுகை நடவடிக்கைகளில் குறிப்பிட்டுள்ளவாறு செயற்படப்படும்.	பெறுகைகள் வழிகாட்டல்களின் பிரகாரம், கொள்வனவுகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஊ)	**அமைச்சரவைத் தீர்மானங்கள்**			
i.	2013 பெப்ரவரி 07 ஆம் திகதிய இலக்கம் 13/0150/523/005 கொண்ட அமைச்சரவைத் தீர்மானம்	நிறுவனத்தை ஸ்தாபித்த சட்டத்தைத் திருத்துவதற்கு அனுமதிவழங்கப்பட்டிருந்தும், அது நடைமுறைப்படுத்தப்பட வில்லை.	1982 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க சட்டத்தைத் திருத்துவதற்காக சிரேஷ்ட ஆலோசகர் ஒருவரைக் கொண்ட ஒரு நபர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க, தற்போதுள்ள	தற்போதைய நிலையில் பதவிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் நிறுவனத்தின்

			நிலைமைக்கு உகந்தவாறு குழுவினால் சமர்ப்பிக்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் சட்டம் திருத்தப்படும்.	விடயப் பரப்பு என்பவற்றில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் உள்ளடங்கலாக, சட்டத்திற்குத் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
ii.	2013 ஏப்ரல் 19 ஆம் திகதிய இல. 13/0237/523/011 கொண்ட அமைச்சரவைத் தீர்மானம்	1. நிறுவனத்தை தாபித்த சட்டத்திற்குச் செய்யப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டு, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், நிறுவனத்தின் பணிப்பாளர் பதவியை பணிப்பாளர் நாயகமாகவும், மேலதிக பணிப்பாளர் பதவியை மேலதிக பணிப்பாளர் நாயகமாகவும் தரம் உயர்த்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தும், பணிப்பாளர் நாயகம் பதவியும் 06 மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிகளும் சட்டத்திற்குரிய திருத்தங்கள் செய்யப்படாமலேயே முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.	1982 இன் 09 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனச் சட்டத்தில் ''பணிப்பாளர்'' பதவிப் பெயர் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளதால், ''பணிப்பாளர்'' பதவிப் பெயரை ''பணிப்பாளர நாயகமாக'' எதிர்காலத்தில் சட்டம் திருத்தப்படும்போது திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஏனைய பதவிகள் மற்றும் சம்பளக் குறியீடுகள் தொடர்பான மாற்றங்களைச் செய்வதற்கான பிரிவுகள் சட்டத்தில் குறிப்பிடப்படாததால், ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.	தற்போதைய நிலையில் பதவிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் நிறுவனத்தின் விடயப் பரப்பு என்பவற்றில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் உள்ளடங்கலாக, சட்டத்திற்குத் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
		2. துறையில் நிபுணர்களை நிரந்தர அடிப்படையிலோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ கல்விசார் ஊழியர் பதவியணிக்கு ஆட்சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தும்,	2024 ஆம் ஆண்டில் கல்விசார் பதவியணியில் ஆலோசகர் மற்றும் உதவி ஆலோசகர் பதவிகளுக்கு நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அந்த விண்ணப்பங்களில் ஆலோசகர் பதவிக்குச்	அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

	இரண்டாம் நிலை அடிப்படையில் ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன.	சேர்த்துக்கொள்ளத் தகுதியான விண்ணப்பங்கள் இருக்கவில்லை. மொழிகள் பிரிவின் சேவைத் தேவைக்கு இணங்க, அந்தப் பிரிவிற்கு உதவி ஆலோசகர் ஒருவர் நிரந்தர அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார். மேலும், உதவி ஆலோசகர் பதவிக்கு நிரந்தர அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை தற்போது நடத்தப்பட்டுள்ளது. அதன் முடிவுகள் கிடைத்த பின்னர், அந்த ஆலோசகர்கள் ஆட்சேர்க்கப்படவுள்ளனர.	
3.	நிறுவனத்தின் முக்கிய நோக்கம் அரச உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிப்பதாகும் அதற்காக அனைத்துச் சேவைகளையும் சேர்ந்த அரச உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சித் திட்டங்கள் திட்டமிடப்பட வேண்டியிருந்தும், அவ்வாறு செய்யப்படவில்லை.	பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2024 திசெம்பர் 17 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம், அந்த அமைச்சுக்குக் கீழ் அமைக்கப்பட்டிருந்த அரச சேவைகள் பயிற்சி நிறுவனம் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டு, நிறைவேற்றுத்தரமற்ற உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிப்பது தொடர்பாக கலந்துரையாடல் மட்டத்தில் உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், அரச உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.
4.	நிறுவனத்தினால் நடாத்தப்படும் பயிற்சிப் பாடநெறிகளின் உள்ளடக்கத்தை மற்றும் பயிற்சி முறைகளை விசாரணைக்கு உட்படுத்தி, அவற்றைத் திருத்தி அமைப்பது தொடர்பாக அமைச்சரவைக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும், சுமார் 11 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.	பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரிடம் இருந்து உரிய அறிக்கைகளைப் பெற வேண்டியுள்ளதால், இது தொடர்பாக எவ்வாறு செயற்படுவது என்பது குறித்துத் தேவையான ஆலோசனைகளை வழங்குமாறு 2024 ஆகஸ்ட் 23 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அமைச்சுச் செயலாளரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.	அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பாக ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 28,610,370 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகையானது ரூபா 61,548,388 ஆகும். அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூபா 32,938,018 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டின் திறைசேரி மானியங்கள் ரூபா 26,205,524 இனால் மற்றும் இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மதியுரை சேவை வருமானம் ஆகியவற்றின் கூட்டுத்தொகை ரூபா 33,093,555 இனால் அதிகரித்திருந்த போதிலும், முதலீட்டு வருமானம் மற்றும் நானாவித வருமானம் ரூபா 49,650,407 இனால் குறைவடைந்தமையும், பணியாளர் ஊதியங்கள் ரூபா 30,600,296 இனால் அதிகரித்தமையும் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
இதுவரை நடைமுறையில் இருந்த, ஆலோசகர்களுக்கு இரண்டாம் நிலை கல்விசார் கொடுப்பனவை அடிப்படைச் சம்பளத்தின் 50 சதவீதத்தைப் பெறுவதற்கும், வெளிவாரி விரிவுரையாளர்கள் மற்றும் பரீட்சைக் கடமைகளில் இருந்து மேலதிகக் கொடுப்பனவைப் பெறுவதற்கும் மாதத்திற்கு 45 விரிவுரை மணித்தியாலங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற செயல்முறை, 2024 மார்ச் 28 ஆம் திகதியிடப்பட்ட இல. 340.07 கொண்ட ஆளுகைச் சபைத் தீர்மானத்தின் மூலம் மாற்றப்பட்டிருந்தது. அறிமுகப்படுத்தப்பட்ட புதிய செயல்முறையின்படி, ஆலோசகர்கள் பயிற்சி விரிவுரை 20 மணித்தியாலங்கள் மற்றும் பணம் அறவிட்டு நடத்தப்படும் ஏனைய கடமைகள் உள்ளடங்கலாக மாதத்திற்கு 140 மணித்தியாலங்களைப் பூர்த்தி செய்வதன் மூலம் தமது செயற்றிறனைப் பூர்த்தி செய்ய முடியும். அவ்வாறான போதிலும், புதிய செயல்முறையின் கீழ் மாதத்திற்கு நிறுவனத்தின் விரிவுரை 20 மணித்தியாலங்களுக்கும் குறைவாகப் பூர்த்தி செய்திருந்த 14 ஆலோசகர்களுக்கு ரூபா 3,280,550 உம், நிறுவனத்தில் மாதத்திற்கு	இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் ஒரு பாரம்பரியப் பல்கலைக்கழகத்திலிருந்து வேறுபட்ட, அரச சேவையில் உள்ள ஊழியர்களுக்கு தொழில்முறைப் பயிற்சி அளிக்கும் நிறுவனமாகச் செயற்படுவதால், இந்தப் பயிற்சிக்கு வருகை தரும் பல்வேறு நாடளாவிய சேவைகளின் விசேட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், அத்துடன் உள்ளடக்கப்பட வேண்டிய பல்வேறு விடயங்களுக்காகவும் நிபுணத்துவ அறிவைக் கொண்ட கலவையை இந்த நிறுவனம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பேணி வர வேண்டும். ஆலோசகர்களின் செயலாற்றலை மதிப்பீட்டின்போது, நிறுவனத்தின் நோக்கு மற்றும் பணி ஆகியவற்றை அடைந்துகொள்வதற்காக நிறைவேற்றப்பட வேண்டிய அனைத்துக் கடமைகளையும் கருத்திற் கொள்வது உகந்தது என ஆளுகைச் சபையினால் அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்தத் திருத்தப்பட்ட செயல்முறையின்படி, மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துக் கடமைகளுக்கும் ஒரு ஆலோசகரின் குறைந்தபட்ச தொழில் கடமை மாதத்திற்கு 140 மணித்தியாலங்களாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் செயல்முறை தற்போது ஆராய்ச்சி மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.	குறிப்பிட்ட மற்றும் பொருத்தமான நியமங்களின் அடிப்படையில் ஆலோசகர்களின் செயத்திறன் வருடாந்தம் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.

ஒரு விரிவுரை மணித்தியாலம்கூடப் பூர்த்தி செய்யாத 07 ஆலோசகர்களுக்கு ரூபா 881,433 உம் இரண்டாம் நிலை கொடுப்பனவுகளாகச் செலுத்தப்பட்டிருந்தன. மேலும், இந்த ஆலோசகர்களுக்கு வெளி விரிவுரைகள் மற்றும் ஏனைய கட்டணங்களுக்காக ரூபா 3,483,572 செலுத்தப்பட்டிருந்தது.

3.2 சொத்துக்களின் குறைப்பயன்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2016 ஆம் ஆண்டில் நிறுவனத்தினுள் தாபிக்கப்பட்ட உடற்கட்டமைப்பு நிலையத்திற்காக ரூபா 9,870,120 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், அந்த உபகரணங்களைப் பராமரிப்பதற்கும் மற்றும் சேவை செய்வதற்கும் எந்தவொரு ஒப்பந்தமும் செய்துகொள்ளப்படவில்லை. அந்த நிலையத்திற்காக ஒரு உடற்கட்டமைப்பு ஆலோசகரின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன், கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்கள், மழை நீர் கசியும் ஒரு கட்டிடத்தில் குறைந்த பாவனையில் காணப்பட்டன.	உடற்கட்டமைப்பு நிலையம் அமைந்துள்ள கட்டிடத்தின் கூரையினைப் புனரமைப்பதற்கான அத்தியாவசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	சொத்துக்களின் இருப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அத்துடன் சொத்துக்கள் உச்சமான முறையில் பயன்படுத்தப்படல் வேண்டும்.

3.3 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிறுவனத்திற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்று தாபிக்கப்பட்டு இருந்தபோதிலும், அதற்காக பதவியணியொன்று அங்கீகரிக்கப்படவில்லை. மேலும், உள்ளகக் கணக்காய்வாளரின் உதவி பதவியணியாக ஒரு உத்தியோகத்தர் மட்டுமே இணைப்பு செய்யப்பட்டிருந்தார்.	நிறுவனத்தின் சேவைத் தேவைக்கு இணங்க, ஒவ்வொரு பிரிவிற்கும் பதவியணி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்குச் சேவைத் தேவைக்கு இணங்க, தினசரி சம்பளம் பெறும் பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிநுட்பப் பல்கலைக்கழகங்களில் வேலைவாய்ப்பில் பயிற்சி பெறுவதற்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்துடன் இணைக்கப்பட்ட மாணவர்களும் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.	உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக பதவியணி ஒன்று அனுமதி செய்யப்பட்டு, அதற்கிணங்க ஊழியர்கள் ஒதுக்கப்படல் வேண்டும்.

(ஆ)	2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்படியாக நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 166 ஆகவும், உண்மையான பதவியணி 116 ஆகவும் இருந்தது. இதில் சிரேஷ்ட மட்டத்தில் இருந்த 47 பதவிகளில் 21 பதவிகள் வெற்றிடமாக இருந்தன. அத்துடன் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட 26 பதவிகளில் 20 இற்கு இரண்டாம் நிலை அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் 31 பேர் இரண்டாம் நிலை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். இரண்டாம் நிலை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் இரண்டு வருடங்களில் நிறுவனத்தை விட்டுச் சென்றதன் காரணமாக, மீண்டும் மீண்டும் உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. மீளாய்வாண்டில், ஒரு பணிப்பாளர் நாயகம், 07 ஆலோசகர்கள் உட்பட 15 உத்தியோகத்தர்கள் நிறுவனத்தை விட்டு விலகிச் சென்றிருந்தனர். அத்துடன், 06 ஆலோசகர்கள் உட்பட 18 உத்தியோகத்தர்கள் இரண்டாம் நிலை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் மிகவும் அத்தியாவசியமான வரையறுக்கப்பட்ட சில பதவிகளுக்கு மாத்திரம் வெளியில் இருந்து ஆட்களைச் சேர்த்துக்கொள்ள 2024 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அந்தப் பதவிகளுக்குப் பொருத்தமான உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, ஏனைய அத்தியாவசிய வெற்றிடங்களைப் நிரப்புவதற்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.	அத்தியாவசிய ஊழியர்கள் நிரந்தர அடிப்படையிலும், ஏனைய ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையிலும் சேர்த்துக்கொள்ளப்படல் வேண்டும்.

4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அரச உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தும், நிறைவேற்றுத் தரமற்ற சேவைகளைச் சேர்ந்த 03 சேவைகளின் 348 உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கான 03 சேவைகள் ஆரம்பப் பயிற்சித் திட்டங்களும் மற்றும் நிறைவேற்று சேவைகளைச் சேர்ந்த 04 சேவைகளின் 1,241	அமைச்சின் கீழ் இருந்த அரச சேவைகள் பயிற்சி நிறுவனம் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டு, நிறைவேற்று அல்லாத உத்தியோகத்தர்களுக்கு நேரடியான பயிற்சி அளிப்பது கலந்துரையாடல் மட்டத்தில் உள்ளது. நிறுவனம் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு இணையவழி முறைக்கு பயிற்சி அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்து	நிறுவனத்தின் நோக்கங்களுக்கு இணங்க, அரச உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான நகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

	உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கான 12 சேவைகள் ஆரம்ப மற்றும் திறன் விருத்தித் திட்டங்களும் மட்டுமே செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.	வருகிறது. மேலும், மாகாண மட்டத்தில் நிறைவேற்றுதரம் அல்லாத உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்படும் பயிற்சிப் பாடநெறிகளுக்குத் தேவையான வளவாளர்களைப் பயிற்றுவிப்பதற்காக "பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் திட்டங்களையும்" நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.	
(ஆ)	செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு இருந்த நாடளாவிய சேவைகளின் விசேட தரத்தின் 360 உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்கும் 12 திட்டங்களில் 07 திட்டங்கள் நடத்தப்படவில்லை. மேலும், நாடளாவிய ரீதியான இரு சேவைகளைச் சேர்ந்த 221 உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கான 07 திட்டங்களின் அலகுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முன்னேற்றம் 8-17 சதவீதத்திற்கு இடையில் காணப்பட்டது. அத்துடன், 900 நிறைவேற்று உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கான 30 குறுகிய காலப் பயிற்சித் திட்டங்களும், 200 உத்தியோகத்தர்களுக்குப் பணம் அறவிட்டு நடத்தப்படும் 06 டிப்ளோமா பாடநெறிகளும், 60 உத்தியோகத்தர்களுக்குப் பணம் அறவிட்டு நடத்தப்படும் 02 சிங்கள மற்றும் தமிழ்ப் மொழிச் சான்றிதழ்ப் பாடநெறிகளும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆண்டின் போது நடத்தப்பட வேண்டிய 450 உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கான 05 பயிலரங்குகளும் நடாத்தப்படவில்லை.	2024 ஆம் ஆண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் மற்றும் இறுதிப் காலாண்டில் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் காரணமாக, விசேட தர உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டியிருந்ததால், பயிற்சிக்கு அழைக்கப்படவில்லை. இதனால், 05 பயிற்சித் திட்டங்கள் மட்டுமே நடாத்தப்பட்டன. 2025 ஆம் ஆண்டில் பாடநெறிகளை மீண்டும் மீளாய்வு செய்து, உத்தியோகத்தர்களுக்கு அந்தப் பாடநெறிகளின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு எதிர்காலத் நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிகளை ஆண்டின் போது நடைமுறைப்படுத்தி, எதிர்பார்க்கப்பட்ட செயற்றிறன் மட்டத்தை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு இருந்த, ரூபா 18,700,000 ஆக மதிப்பிடப்பட்ட கிரயத்தில் சூரியப் பலகைகள் பொருத்துதல், பழுதுபார்த்தல், மீள் நிர்மாணம் மற்றும் புனரமைப்பு தொடர்பான 05 பணிகளும், அத்துடன் ரூபா 11,750,000 ஆக	சூரியப் பலகைகள் தொகுதி தொடர்பான பொருள் அளவு மற்றும் விலைப்பட்டியல் (BOQ) / தொழிநுட்ப ஆவணங்களைத் தயாரிக்கும்போது பல்வேறு தொழிநுட்பப் பிரச்சினைகள் ஏற்பட்டதன் காரணமாக, இலங்கை மின்சார சபையின் (கொழும்பு தெற்கு) கிளையிடம் இருந்து அனுமதி கோரி அனுப்பப்பட்டுள்ளது. அந்த அனுமதி	நடைமுறைச் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். அத்துடன் செயற்பாட்டுத் திட்டத்தில்

மதிப்பிடப்பட்ட கிரயத்துடனான அடிப்படை வசதிகள் மற்றும் மென்பொருள் அபிவிருத்தி என்பவற்றின் கீழ் உள்ள 05 நடவடிக்கைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	கிடைத்த பின்னர், உரிய BOQ / தொழிநுட்ப ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு, அந்தக் கடமையினை இந்த வருடத்திலேயே நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நுவரெலியா சுற்றுலா விடுதியின் உள்ளகக் குளியலறைகள் மற்றும் பங்களா பொறுப்பாளரின் வசிப்பிட அறை உள்ளடங்கலான புனரமைப்புப் பணிகளை 2025 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிறுவன வளாகத்தின் நிலப்பரப்பு அழகுபடுத்தும் பணிகள் தற்போது நிறுவனத்தின் சேவையில் ஈடுபட்டுள்ள தாவரவியல் தொடர்பான நிபுணத்துவ அறிவைக் கொண்ட ஒரு சிரேஷ்ட ஆலோசகரைக் கொண்ட குழுவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	உள்ளடக்கப்பட்டுள்ள பணிகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.